# 4

## நாதாப்

# தவறான மூலத்தின் பிரதி

*வேதபாடப் பகுதி: 1 இராஜாக்கள் 15:25-31*

பிள்ளைகள் வழக்கமாக அவர்களின் பெற்றோர் அவர்களுக்குப் போதிக்கின்ற பிரகாரமும், அவர்கள் முன்வைக்கும் உதாரணத்தின் படியேயும் ஆவார்கள் என்பதைத் தேவன் வாழ்வின் பின்னலுக்குள் பின்னி வைத்திருக்கின்றார். இது, நாம் அவர்களுக்கு முன்பாகத் தேவனுடைய சுவிசேஷத்தை வைத்தாலும் அல்லது சாத்தான் மற்றும் இவ்வுலகத்தின் போதனையை வைத்தாலும் உண்மையானதாக உள்ளது. அவர்கள் எதைக்கொண்டு வாழ்கின்றார்களோ அதையே பின்பற்றி நடக்கின்றனர். ஆகவே, பெற்றோர்கள் தங்களைப் போன்றே தங்கள் பிள்ளைகளும் மாறுவார்கள் என்ற பயத்திற்குரிய உணர்ந்தறிதலைக் கொண்டு வாழவேண்டியுள்ளது. நமது இல்லத்திற்குள் நடக்கின்ற வற்றிற்கு நமது பிள்ளைகளே மேலான பொருளடக்கமாக இருக் கின்றனர். “தகப்பனைப்போல, மகன் இருக்கின்றான்; தாயைப்போல், மகள் இருக்கின்றாள்” என்பதே பெற்றோர்த்துவத்தின் முதல் உண்மைக் கருத்தாக உள்ளது.

பிள்ளைகள் நாம் கூறுவது அல்லது செய்வதைக் காட்டிலும் அதிகமாக நாம் எவ்வாறு இருக்கிறோம் என்பதைப் பின்பற்றுகின்றனர். நான் கேட்க வேண்டிய மிகப்பெரிய கேள்வி வாழ்வின் மிகமுக்கிய பகுதிக்கு நேரடியாகச் செல்லுகிறது: ‘‘தேவன் தவிர மற்ற எவரும் காணாத, மிக ஆழ்ந்த உட்பகுதியில், நான் உண்மையில் என்னவாக இருக்கின்றேன்?’’ அந்தக் கேள்விக்கு நான் பதில் அளித்திருக்கும்போது, நான் இன்னொரு கேள்வியைக் கேட்பதற்குச் சாத்தியக்கூறுள்ளது: “நான் எதை உண்டாக்குவேன்?’’ விஷயங்களைத் தேவன் வடிவமைத் துள்ளபடி, பிள்ளைகளுக்கு முன்னால் நாம் எவற்றை வைக்கின்றோமோ, அவற்றின்படியே அவர்கள் உருவாகின்றனர்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை பொறுப்புள்ள கிறிஸ்தவ வாழ்க்கை-வாழும்படி செய்வதற்குப் பயன்படுத்துவதற்காகத் தேவன் அவர்களுக்கு [பெற்றோர்களுக்கு] வாழ்வைப் பாதிக்கும் இந்தச் செல் வாக்கைக் கொடுத்துள்ளார் (நீதிமொழிகள் 22:6; எபேசியர் 6:1, 2). இது இல்லத்தில் பிள்ளைகள் வளரும் காலம்தான் அவர்களுக்கு மிகச்சிறந்த போதனையை அளிக்கும் நேரமாக உள்ளது என்று அர்த்தப்படுகிறது. பின்பு என்பது மிகவும் தாமதமாகிவிடலாம். பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் வாழ்வில் அன்றாடம் கிறிஸ்துவைக் கண்டு வாழ்கிறபோது, அவர்களின்

*எஞ்சிய வாழ்வு முழுவதற்கும், அவர் [கிறிஸ்து] அவர்களின் சிந்தனையின் அங்கமாகவும் வாழ்வின் முறைமைகளாகவும் ஆகின்றார்.*

*இதன் எதிர்க்கருத்தும் உண்மையானதாகவே உள்ளது: பிள்ளைகள் ஆவிக்குரிய வகையில் மாறுபாடு அல்லது துன்மார்க்கத்துடன் அன்றாடம் வாழும்போது, அவர்கள் தங்கள்மீது திணிக்கப்படும் சுற்றுச் சூழலின் அச்சினுடைய உருவகமாகின்றனர். ஒரு பிள்ளை, அவன் கீழ்ப்படுத்தப் பட்டிருந்த சிதைவுற்ற இல்லவாழ்விற்கு மேலாக உயர்ந்து எழும்பலாம், மற்றும் ஒரு பிள்ளை தன்னைச் சுற்றியுள்ள ஆவிக்குரிய தன்மையின் அளவுக்கு எழும்பாமல் கீழே மூழ்கிப்போகலாம்; ஆனால் உயர்ந்த சதவிகித அளவு வேளைகளில் அவன் எவ்வாறு இருக்க வேண்டும் என்று போதிக்கப்படுகின்றானோ அவ்வாறே அவன் ஆவான்.*

*நேர்மையற்ற ஒரு மனிதனைத் தனது தகப்பனாகக் கொண்டிருந்த ஒரு பையனை நோக்கி நமது இருதயம் செல்லுகிறது. அந்தப் பையன் இருமடங்கு சபிக்கப்பட்டவனாய் இருந்தான். அவனது இல்ல வாழ்வு குறைவுபட்டிருந்தது, ஏனெனில் அவனுக்கு ஒரு தகப்பன் மாத்திரமே அளிக்கக்கூடிய மகிழ்ச்சியான பிள்ளைப் பிராயத்திற்குத் தேவையான ஆவிக்குரிய அளவீடுகளை அவன் தவற விடுவான். அவனது இளம்வயதுப் பருவ வாழ்வு கடினமானதாயிருக்கும், ஏனெனில் அவன் வழிநடத்துதல், நினைவுகள், உற்சாகமூட்டப்படுதல், மற்றும் தனது தொடக்ககால வாழ்வில் தகப்பன்/மகன் உறவானது கட்டியெழுப்பக்கூடிய நல்லுணர்வு என்ற அவனுடைய இளம்வயது வாழ்விற்குத் தேவையான அஸ்திபாரம் எதுவும் இல்லாது வாழ வேண்டியிருக்கும். கிறிஸ்தவத் தகப்பன் இல்லாத ஒரு பையன் என்பது மிகவும் கவலைக்குரிய காட்சியாக உள்ளது.*

*இஸ்ரவேலின் இரண்டாவது அரசருடைய மகனாகிய நாதாப், வாழ்வைப் பேரழிவுக்கு உட்படுத்தும் அனுகூலமின்மையைச் சந்தித்தான்: அவன் மதரீதியான பாவியைத் தனது தகப்பனாகக் கொண்டிருந்தான். ஒரு மனிதன் நல்ல தகப்பனைக் கொண்டிராவிட்டால், மற்றும் அவன் தனது தகப்பனைப் போலானால், அவனும் நல்லவனாயிருக்கமாட்டான் என்பது தெளிவு. அதுவே நாதாபுடைய வாழ்வு பற்றிய ஒருவரி விளக்கமாகும். அவனது தகப்பனாகிய யெரொபெயாம், நாம் கண்டுள்ளபடி, பின்வரும் ஒரு விஷயத்தைச் செய்திருந்தார்: அவர் இஸ்ரவேலைப் பாவத்திற்குள் நடத்தியிருந்தார். நாதாப், கி.மு. 910 முதல் 909 வரை, இரு ஆண்டுகளில், சில பகுதிகளே ஆட்சி செய்திருந்தார் (15:25), மற்றும் அவரது சுருக்கமான ஆளுகையானது யெரொபெயாமுடைய வம்சத்தின் கடைசித்துளியாய் இருந்தது. அகியாவினால் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டபடி (15:29), நாதாபின் மரணத்துடன், யெரொபெயாம் வீட்டாருடைய ஆளுகை முடிவுற்றது.*

*நாதாப் தம் தகப்பனுக்குப் பின் அரியணை ஏறியபோது, தெற்கு ராஜ்யத்தில் அரசராக, ஆசா தமது ஆளுகையின் இரண்டாம் ஆண்டில் இருந்தார் (15:25). நாதாபுக்கு ஏழு வசனங்கள் மாத்திரமே ஒதுக்கப் பட்டுள்ளன, மற்றும் அவருக்கு அவ்வளவே தேவையாயிருக்கின்றன. அவரைப்பற்றிச் சிறிதளவே கூறுவதைப் பரிசுத்த ஆவியானவர் தேர்ந்து*

கொண்டார். ஒருவேளை காகிதமும் மையும் அவரது வாழ்வைப்பற்றி எழுதப் பயன்படுத்தப்பட்டால் அவை வீணானதாயிருக்கலாம். அவர் தமது தகப்பனின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினார் என்பதைத் தவிர அவரைப் பற்றிக் கூறுவதற்கு எதுவுமில்லை. அதுவே போதுமான கூற்றாக உள்ளது; அதுவே எல்லாவற்றையும் கூறுகிறது.

ஒவ்வொருவரும் ஒரு மூலப்பிரதியாகப் பிறந்து, நகல்பிரதியாக இறக்கின்றார் என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார். பெரும்பான்மையான மக்கள் தங்கள் தொடக்க வாழ்வில் பிரதிகளாகின்றனர். அவர்கள் தங்கள் பெற்றோர்களின் பிரதிகளாகின்றனர். பெற்றோர்கள் தேவபக்தியுள்ளவர் களாயிருந்தால் அது சரியானதும் நல்லதுமாயிருக்கிறது. அவர்கள் அவ்வாறு இல்லையென்றால், அது பேரழிவாயிருக்கிறது. பிள்ளைகள் வடிவமைப்புப் பெறும் விஷயமானது உண்மையே. நாதாப் தமது தகப்பனைப்போல் ஆனார். நாதாபின் தகப்பன் விரிவாக்கப்பட்ட மனிதத் தவறாயிருந்த படியால், நாதாப் தவறான மூலத்தினுடைய பிரதியாக இருந்தார்! மூலம் மோசமானதாக இருந்ததால், பிரதி மோசமானதாக இருந்தது.

இது எவ்வாறு உண்மையாயிருந்தது என்று கவனித்து, அழுங்கள்!

## தேவனிடத்திலான அவரது எண்ணப்போக்கில்

நாதாப் தமது எண்ணப்போக்கில் தமது தகப்பனைப் பின்பற்றினார் என்று வேதாகமம் கூறுகிறது:

> அவன் கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, தன் தகப்பன் வழியிலும், அவன் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப் பண்ணின அவனுடைய பாவத்திலும் நடந்தான் (15:26).

‘‘அவன் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின அவனுடைய பாவத்திலும்’’ என்ற சொற்றொடர், சற்றே மாறுதல்களுடன், வடக்கு ராஜ்யத்தின் பத்தொன்பது ஆட்சியாளர்களைப் பற்றியும் திரும்பத் திரும்பக் கூறப்படுகிறது.[1] இது, ஆராதனைக்கு பொன்கன்றுக்குட்டி மையங்களைப் பயன்படுத்தும் பாவத்தையும் யெரொபெயாம் அமைத்திருந்த மதரீதியான அமைப்பு முழுவதையும் தொடர்ந்து பயன்படுத்தும் பாவத்தையும் குறிக்கிறது. ஆராதனைக்கான இவ்வகையை நாதாப் வடிவமைக்கவில்லை, ஆனால் அவர் இந்த தவறான ஆராதனையைத் தொடர்ந்தார் மற்றும் அதை அவர் நீக்காதிருந்தார். தேவன், நாதாபு தாமே தம் செய்கைக்குப் பொறுப்பாளி என்று ஆக்கியிருந்தார். அவர் [நாதாப்] தவறான ஆராதனையை நிறுத்த அதிகாரம் கொண்டிருந்தார், ஆனால் அவர் அதைச் செய்யவில்லை. இந்தத் தவறு நாதாபினால் மாத்திரமல்ல, நாதாபுக்குப் பின்வந்த ஒவ்வொரு அரசராலும் செய்யப்பட்டது. இந்தப் பாவத்திற்காக அவர்களைத் தேவன் எப்போதுமே கடிந்துகொண்டார்.

பெற்றோர்களாகிய நம் மூலமாகவே நமது பிள்ளைகள் முதலில் தேவனைக் காண்பார்கள் என்று அறிவது பெற்றோராகிய நமக்கு

எப்படி இருக்க வேண்டும்! தாயின் கரத்தில் உள்ள சிறுபையன் அல்லது பெண்குழந்தை வேதாகமத்தை வாசிக்கவும் தானாகவே தேவனைப் பற்றி அறியவும் முடியாது; அவன் அல்லது அவள் தன்னைத் தேவனை நோக்கி வழிநடத்தத் தனது பெற்றோர்களைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது. பெற்றோர்களே பிள்ளைகள் தேவனை உற்றுப் பார்க்க உதவும் உருப்பெருக்கிக் கண்ணாடிகளாய் இருக்கின்றனர். பிள்ளைகளின் முன் குழந்தைப் பருவநாட்களில், தேவனைப் பற்றிய நமது கண்ணோட்டமே அவர்களின் கண்ணோட்டமாகிறது. நமது புரிந்துகொள்ளுதலில் நாம் சரியாய் இருந்தாலும் அல்லது தவறாயிருந்தாலும், நமது பிள்ளைகள், தேவனைப் பற்றி நாம் கூறுவதை ஏற்றுக்கொண்டு நாம் செய்வதையே செய்கின்றனர். அவர்கள் தங்கள் சுயசிந்தைகள் மற்றும் இருதயங்களின் மூலம் தேவனைக் காண்பதற்கு முன்பு, அவர்கள் நம் மூலமாகவே அவரைக் காண்கின்றனர்.

பிற்பாடு, அவர்கள் தங்களுக்குத் தாங்களே சிந்திக்கத் தொடங்குகையில், அவர்கள் தேவனைப் பற்றி நமக்குள் கண்டிருப்பவற்றையும், நம்மால் போதிக்கப்பட்டிருப்பவற்றையும் கொண்டு ஆராய்ந்து பார்க்கின்றனர். கடைசியில், அவர்களின் உண்மையான நம்பிக்கைகளும் முதிர்ந்த வாழ்வும், அவர்களுக்கு முன் நாம் எவ்வாறு வாழ்ந்தோம், நமக்குள் அவர்கள் கண்டது என்ன, அவர்களை நாம் எவற்றை வாசிக்கும்படியும் சிந்திக்கும்படியும் கேட்டிருந்தோம், மற்றும் நாம் அவர்களுக்குக் கொடுத்திருந்த தனிப்பட்ட போதனை என்ன என்பவற்றில் இருந்தே உதிக்கின்றன. அவர்கள் தங்கள் சொந்த வாழ்வில், தங்களுக்குச் சொந்தமான மனங்கள் மற்றும் சிந்தைகளைக் கொண்டிருப்பார்கள், ஆனால் அவர்களின் வாழ்வில் முதல் பதினான்கு அல்லது பதினாறு ஆண்டுகளில் அவர்களின் சிந்தைகளையும் ஆத்துமாக்களையும் உருவாக்குவதில் நாம் தேவனுக்கு உதவுகின்றோம்.

மோசேயின் தாய், மோசே பார்வோனின் அரண்மனையில் இளவரசராக வளர்ந்தபோது, முதல் மூன்று அல்லது அதற்குச் சற்றேறக்குறையலான ஆண்டுகள், அவருக்குப் பாலூட்டவும் போதிக்கவும் வாய்ப்புப் பெற்றிருந்தாள் (யாத்திராகமம் 2:8). மோசே ஒரு வளர்ந்த மனிதராகும் வரையில் அவர்கள் ஆண்டுகளினூடே மற்ற சந்தர்ப்பங்களில் சந்தித்திருக்கலாம். எகிப்தின் மினுமினுப்பு, பொன், மற்றும் ஆடம்பரம் ஆகியவற்றை மோசே விரும்பியிருந்தால், அவை அவருடைய வாழ்வில் கிடைத்திருக்கும். அவர் பார்வோனாகி எகிப்து முழுவதையும் ஆண்டிருக்கலாம்; ஆனால் அவர் தமது நாற்பது வயதில், ஒரு இஸ்ரவேலராக இருப்பதையும் இஸ்ரவேல் மக்களினத்தாருடன் துன்புறுவதையும் தேர்ந்துகொண்டார் (எபிரெயர் 11:24-26). இந்தத் தேர்ந்துகொள்ளுதல், அவரது தாயினால் தரப்பட்டிருந்த போதனையில் தனது வேர்களைக் கொண்டிருந்தது என்பது தெளிவு. எகிப்தின் கல்வி யாவையும் - அது பயமுறுத்துவதாக இருந்தவாறே - மோசே ஒரு பிள்ளையாக இருந்தபோது தேவனைப் பற்றிக் கற்றுக் கொண்டவற்றை அழித்துவிடக்கூடாதிருந்தது.

நாதாப் தமக்கு முன்பாக ஒரு அரியணையையும் வழிநடத்த ஒரு

நாட்டையும் கொண்டிருந்தார். அவர் வயதுள்ளவர் ஆகியிருந்தார். அவர் நடத்துவத்தின் பணிப்பொறுப்பில் அடியெடுத்து வைப்பார். அவர் எவ்வாறு வாழ்ந்தார், அவர் என்ன செய்தார், அவர் தமது நாட்டை எந்தத் திசையில் அழைத்துச் சென்றார் என்பதுபற்றி வரலாறு பதிவுசெய்யும். இந்தக் கணத்திற்கென்று அவர் எவ்வாறு ஆயத்தப்படுத்தப்பட்டிருந்தார்? அவரது ஆயத்தம் என்பது அவருக்குப் பல்வேறு வழிகளில் வந்திருந்தது, ஆனால் அவரது அடிப்படைக் கல்வியானது, அவரது தகப்பனாகிய யெரொபெயாம் என்ற திரைப்படக் கருவியில் அன்றாடம் அவர் கண்டிருந்த வாழ்க்கைத் திரைப்படத்தில் இருந்தே வந்தது. நாட்டை வழிநடத்துவதற்கான அவரது சிந்தனையின் சட்டக அமைப்பு யெரொபெயாமினால் இடப்பட்டிருந்தது. நாதாப் அதைப் பின்பற்ற வேண்டுமா அல்லது வேறொரு ஓட்டத்தின் புற மாய்த் திரும்ப வேண்டுமா? அவர் கொடுத்த பதிலானது, வேதாகமத்தின் வாசகர்கள் காணும்படி பரிசுத்த ஆவியானவரால் தரப்பட்டுள்ளது: அவர், "தன் தகப்பன் வழியிலும், … நடந்தான்" (15:26).

வரிகளில் இருந்து விடுதலை, எல்லைப்பகுதி கூட்டப்படுதல், அல்லது பெரிய இராணுவம் என்ற விஷயங்களைக் காட்டிலும், இஸ்ரவேல் நாட்டிற்கு நீதியின் வழியில் வழிநடத்தப்படுதல் என்பது அதிகமாய்த் தேவைப்பட்டிருந்தது. நாதாப் அந்தத் தேவையைக் காண இயலா திருந்தார். அவர் தமது தகப்பனாரின் வாழ்க்கையினால் கண்கள் கட்டப்பட்டிருந்தார். அவருக்கு முன்பாக, முக்கியமானதென்று யெரொபெயாம் பற்றிக்கொண் டிருந்தவற்றிஞல் வாழ்வின் பெரிய விஷயங்கள் மழுங்கடிக்கப்பட்டிருந்தன. அடைவிடத்துடனான அவரது நாள் வந்தபோது, அவர் தமது தகப்பனைப்போன்றே சாவுக்கேதுவான ஓட்டத்தைத் தழுவிக்கொண்டார்.

## மனிதரிடத்திலான அவரது செயல்பாட்டில்

தாண், பெத்தேல் மற்றும் உயர்ந்த இடங்களைக் குறித்து நாதாப் செய்திருந்த விஷயங்கள் அவரின் மதரீதியான பக்கம் சார்ந்தவையாய் இருந்தன, ஆனால் அவரது மற்ற செயல்கள் மற்றும் கிரியைகள் பற்றிய விஷயம் என்ன? இது ஒரு ஆர்வத்திற்குரிய கேள்வியாயிருக்கிறது. மற்ற துறைகளிலும் அவர் தம் தந்தையைப் பின்பற்றிஞர் என்று நீங்கள் கூறக்கூடும். நாதாபின் வாழ்வு பற்றி ஒரே ஒரு நிகழ்ச்சி மாத்திரம் வேதவசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவரது செயல்கள், குறிப்பிடத் தக்கவையாய் இருந்ததில்லை என்பது உறுதி. அதுவே வாழ்வில் வழியாய் இருக்கிறது. G-o-o-d என்பதில் இருந்து G-o-d என்பதை எடுத்துவிட்டால், எஞ்சுவது o மட்டுமே. ஒரு மனிதன், அரசராக இருந்தாலும் அல்லது அகழி [சாக்கடை] தோண்டுபவராக இருந்தாலும், வங்கியாளராக இருந்தாலும் அல்லது ரொட்டி சுடுகிறவனாக இருந்தாலும், அவரிடத்தில் இருந்து நீதியை எடுத்துவிட்டால் எஞ்சியிருப்பது ஒன்றும் அதிகமானதல்ல. யெரொபெயாமைப் பொருத்தமட்டில் இப்படி இருந்தது, மற்றும் நாதாபைப் பொருத்தமட்டிலும் விஷயம் இப்படியாகவே இருந்தது.

யெரொபெயாம் ஒரு சில யுத்தங்கள் செய்தார் என்பதற்கு அப்பால்

அவரைப் பற்றிச் சிறிதளவே கூறப்பட்டுள்ளது (2 நாளாகமம் 13:19). யெரொபெயாம் தமது சொந்த மதத்தை நிலைநாட்டினார் என்பதே அவரைப்பற்றி நமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ள பிரதான உண்மையாக உள்ளது. அவரது மகன் அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றினார். தாணின் எல்லைப் பகுதியில் இருந்த கிபெத்தோன் என்ற இடத்தை முற்றுகை போட்டார் என்பது மாத்திரமே, நாதாபின் ஆளுகையில் நடைபெற்றதாகப் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரே நிகழ்ச்சியாகும் (15:27). அதன் உரிமையாளர்களான லேவியர்களினால், அது கைவிடப்பட்டிருந்தது. லேவியர்கள் தெற்கு ராஜ்யத்திற்குப் புலம் பெயர்ந்து சென்றிருந்தனர், காலம் கடந்தபோது, கிபெத்தோன் மீண்டும் பெலிஸ்தர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. இது, உண்மை யான ஆசாரியர்கள் பொன் கன்றுக்குட்டிகளையும் ஆராதனையின் புதிய மையங்களையும் அங்கீகரிக்கவில்லை என்பதைக் காண்பிக்கிறது. அவர்கள் தெற்கு ராஜ்யத்திற்குச் செல்லுதலைத் தவிர மாற்றுச் செயல்கள் வேறெதுவும் இல்லாதவர்களாயினர், அங்கு அவர்கள் தேவனுடைய தெய்வீகத் திட்டத்தின்படி அவரைச் சேவித்து ஆராதிக்க முடிந்திருந்தது. இந்தக் காலகட்டத்தில், கிபெத்தோனைப் பெலிஸ்தர்கள் தங்கள் கட்டுப் பாட்டின்கீழ் வைத்திருந்தனர், அதைத் திரும்பப் பெற நாதாப் முயற்சி செய்தார்.

இவ்விதமாக, நாதாபின் ஆளுகை குறுகியதாகவும் தனிச்சிறப்பற்ற தாகவும் இருந்தது. அவர் தேசத்தைத் தவறான வழியில் நடத்தினார். அவரது ஆளுகை தனிச்சிறப்பற்றதாக இருந்தது, அவரது பெயர் மறக்கப்பட் டிருக்கிறது. அவரைப்பற்றி வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது என்ன என்பதை வேதாகமக் கல்வியாளர்களில் ஒருசிலரே நினைவில் வைத்திருப் பார்கள்.

நாம் மரிக்கின்றபோது, நமது உறவினர்கள் மத்தியில் சற்றுக்காலம் கலந்துரையாடப்படும் தலைப்பாக இருப்போம், ஆனால் விரைவிலேயே நமது பெயர் அவர்களின் மத்தியில்கூட மிக அரிதாகவே குறிப்பிடப்படும். நாம் இந்த பூமியில் இருந்து - உடல்ரீதியாக மாத்திரமல்ல, ஆனால் முற்றிலுமாகவே - கடந்து போயிருப்போம். தேவபக்தியுள்ள வாழ்வு, நமது பிரிவுக்கு அப்பாலும் தாமதித்து நிற்கும் நற்செயல்களை இயக்கத்தில் அமைக்கிறது மற்றும் அது இவ்வுலகில் நமது பெயர்கள் மற்றும் நினைவு களுக்கு அப்பாலும் தொடர்ந்து செயல்படுகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 14:13) என்ற உணர்ந்தறிதல் மாத்திரமே ஒரே ஆறுதலாக உள்ளது. தேவனுடைய சித்தத்திற்குப் புறம்பே தமது வாழ்வை வாழும் மனிதர் மறக்கப்படுவார், அவரது வாழ்விற்குப் பிந்திய விளைவு என்பது ஆசீர்வதிப்பதாக அல்ல, ஆனால் சபிப்பதாகவே இருக்கும்.

## கடைசியாக அவர் கொலைசெய்யப்பட்டதில்

நாதாபின் வாழ்வு எவ்வாறு முடிந்தது? உங்களைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள். ஒருவர் தமது தகப்பனைப் போன்று வாழும்போது, அவர் அனேகமாகத் தம் தகப்பனைப் போன்றே மரிப்பார். நாம் வாழ்ந்துள்ள

*வகையானது நமது சவ அடக்கத்தைப் பிரசங்கம் செய்கிறது.*

*நாதாப் ஒரு அரசர் என்ற வகையில் தகுதியற்றவராக இருந்தார், மற்றும் விரைவிலேயே அவருக்குக் கீழ் இருந்தவர்கள் மேற்கொண்டனர். நாதாபின் சேனைத் தலைவரான பாஷா, நாதாபுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்து, அவரைக் கொன்றுபோட்டு, அவரது ராஜ்யத்தை அபகரித்துக்கொண் டார். யெரொபெயாமின் அரியணையை உரிமைகோர அவரது வீட்டாரில் ஒருவரும் இருக்கக்கூடாது என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக, அவர் [பாஷா], யெரொபெயாமின் வீட்டார் அனைவரையும் கொன்றார். இவ்விதமாக அகியாவின் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று:*

> *அப்பொழுது யெரொபெயாம் செய்ததும், இஸ்ரவேலைச் செய்யப் பண்ணினதுமான பாவங்களினிமித்தமும், அவன் இஸ்ரவேலின் தேவனுகிய கர்த்தருக்கு உண்டாக்கின கோபத்தினிமித்தமும், கர்த்தர் சீலோனியனான அகியா என்னும் தமது ஊழியக்காரனைக்கொண்டு சொல்லியிருந்த வார்த்தையின்படியே, அவன் ராஜாவானபின் அவன் யெரொபெயாமின் வீட்டாரையெல்லாம் வெட்டிப் போட்டான்; யெரொபெயாமுக்கு இருந்த சுவாசமுள்ளதொன்றையும் அவன் அழிக்காமல் விடவில்லை (15:29, 30).*

*அகியா, யெரொபெயாமின் மனைவியிடத்தில், தேவன் யெரொபெ யாமின் வீட்டாரைச் சங்கரிக்கும்படி ஒரு அரசரை எழும்பப் பண்ணுவார் என்று தீர்க்கதரிசனம் கூறியிருந்தார் (14:12-16). தேவன் அந்தத் தீர்க்கதரி சனத்தை பாஷாவின்மூலம் நிறைவேற்றினார்.*

*கடைசியில் யெரொபெயாம் நியாயந்தீர்க்கப்பட்டார், அவரைத் தேவன் அடித்தார். கடைசியில் நாதாப் நியாயந்தீர்க்கப்பட்டார், அவரைக் கொல்லும்படி பாஷாவைத் தேவன் அனுமதித்தார். துன்மார்க்கம் எப்போதுமே போலிப்பணத்தில் கிரயம் செலுத்துகிறது. துன்மார்க்கமான மனிதனின் வாழ்வு துன்பகரமாக உள்ளது, ஆனால் மனந்திரும்புதலற்ற அவரது மரணம் பேரழிவாக உள்ளது!*

*தேவன் தமது ஆவியானவர் மூலமாக நம்மைக் காட்சிகளுக்குப் பின்னால் எடுத்துச்சென்று, குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகள் அவை நடந்த வண்ணம் ஏன் நடந்தன என்று நமக்குக் கூறுதல் என்பது 1 மற்றும் 2 இராஜாக்கள் புத்தகங்களின் ஆர்வத்திற்குரிய பண்பாக உள்ளது. யெரொபெயாம், மரித்தார் என்று மாத்திரம் நமக்குக் கூறப்படுவதில்லை; தேவன் அவரை மரிக்கச் செய்தார் என்று கூறப்படுகிறது. நாதாபினு டைய மரணம் ஒரு கொலையாக மாத்திரம் இருக்கவில்லை; அது அவரது வாழ்வின்மீது தேவன் கொண்டுவந்த நியாயத்தீர்ப்பாகவும் இருந்தது! மனிதன் தனது சரீரத்திற்குரிய கண்களால் மாத்திரமே ஒரு நிகழ்ச்சியைக் காணுகின்றான், ஆனால் அந்த நிகழ்ச்சிக்குப் பின்னால் தேவனுடைய அருளிரக்கம், சிலவற்றைச் சாதித்துக்கொண்டிருக்கலாம் அல்லது சிலவற்றை நடக்க அனுமதித்துக்கொண்டிருக்கலாம். இந்த உலகத்தில் நாம் விசுவாசத்தினால் நடந்து, தேவன் தமக்குச் சித்தமானபடி நம்மை ஆசீர்வதிக்கின்றார் என்பதில் நம்பிக்கையாய் இருக்க வேண்டும்.*

*இந்த வாழ்வில் தேவன் நமக்குச் செய்துள்ளவற்றில் நம்மால் காண அல்லது புரிந்துகொள்ள முடியாதவற்றை, ஒருவேளை நித்தியத்தில் நாம் புரிந்துகொள்வதற்கு அனுமதிக்கப்படலாம்.*

## முடிவுரை

*நாதாபின் வாழ்வுமீது வல்லமையான ஒரு வாக்கியம் வைக்கப்பட வேண்டும்: "அவன் ... தன் தகப்பன் வழியிலும், ... நடந்தான்" (15:26). அவர் சுயாதீனமுள்ள ஒழுக்கமுகவராய் இருந்தார். அவர் மாறியிருக்க முடியும், வேறுதிசையில் சென்றிருக்க முடியும், ஆவிக்குரிய தலைவராக இருந்திருக்க முடியும் - ஆனால் அவர் தமது தகப்பனைப் பின்பற்றுவதைத் தேர்ந்துகொண்டார். வரலாற்றின் விரலானது அவரது வாழ்வைப் பற்றி, அவர் தவறான மூலத்தின் பிரதியாய் இருந்தார் என்று எழுதுகிறது.*

*சுவிசேஷப் பிரசங்கியாராக இருக்கும் ஒருவருடைய மகனும் சுவிசேஷப் பிரசங்கியாராக இருக்கக்கூடிய ஒரு உள்ளூர் சபைக்கூட்டத் திற்கு நான் சமீபத்தில் சென்றிருந்தேன். இளம் பிரசங்கியாருடன் நான் இருந்த அந்தக் குறுகிய வேளையில் தெளிவாகக் காணப்பட்ட பல நல்ல பண்புகளை அவர் கொண்டிருந்தார், ஆனாலும் "நீங்கள் உங்கள் அப்பாவைப் போன்றே இருக்கின்றீர்கள்!" என்ற பழைய சொற்றொடர் தான் அவருக்குக் கொடுக்கப்பட வேண்டிய மிகச்சிறந்த பாராட்டுரையாக இருந்தது. அவரது தந்தை ஒரு சுவிசேஷப் பிரசங்கியாராக இருந்தார், இந்த இளைஞரும் ஒரு சுவிசேஷப் பிரசங்கியாராக ஆனார். அப்பாவைப் போலவே, மகனும் இருக்கின்றார். பவுல், "நான் கிறிஸ்துவைப் பின்பற்று கிறது போல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" என்று எழுதினார் (1 கொரிந்தியர் 11:1). நாதாபின் விஷயத்தில், "அவர் தமது தகப்பனைப்போன்றே இருந்தார்!" என்ற குற்றச்சாட்டானது அவரைப் பற்றிக் கூறக்கூடிய மிகமோசமான விஷயமாகும். இப்படிப்பட்ட விளக்கம், அவரது தந்தையின் தோல்வியைப் பற்றியும் அவரது தோல்வியைப் பற்றியும் கூறுகிறது. நமது மகன்கள் அவர்களின் தந்தையர்களைப்போல் இருக்கின்றனர் என்று கூறக்கூடியது மிகச்சிறந்த விஷயமாயிருக்கட்டும், ஏனெனில் அது, தந்தையர்கள் மற்றும் மகன்கள் ஆகிய இருசாராருமே வெற்றியடைந்தவர்கள் என்று அர்த்தப்படுத்தும்!*

**கற்க வேண்டிய பாடம்:**
**தவறான மூலத்தைப் பிரதியெடுக்காதீர்கள்.**

---

குறிப்பு

[1]திப்னியும் கணக்கிடப்பட்டால், வடக்கு ராஜ்யம் இருபது அரசர்களைக் கொண்டிருந்தது.